සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

ක්‍රිස්තියානි ශිෂ්ටාචාරය I
கிறிஸ்தவ நாகரிகம் I
Christian Civilization I

49 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.

※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** உரோமை நகரினூடாகப் பாய்ந்தோடும் ஆறு
(1) தைபர் (2) ரயின் (3) டனுபே (4) யூப்பிரதீஸ் (5) தைக்கிரீஸ்

**2.** 'வல்கேற்' என்று அழைக்கப்படும் மொழிபெயர்க்கப்பட்ட விவிலியம் எழுதப்பட்டுள்ள மொழி
(1) கிரேக்கம் (2) பொனீசியன் (3) எகிப்து (4) சிரியன் (5) இலத்தீன்

**3.** பண்டைய உரோமையின் பெருபான்மையான குடிமக்கள்
(1) பற்றீசியர்களாவர். (2) பிளேபியன்களாவர்.
(3) நப்போலித்தர்களாவர். (4) புளோரன்சியர்களாவர்.
(5) வெனிசியர்களாவர்.

**4.** திருச்சட்ட வல்லுனர்களுள் முதன்மையானவராகக் கருதப்படுபவர் யார்?
(1) நெகேமியா (2) சாதோக் (3) தானியேல் (4) எசேக்கியேல் (5) எஸ்ரா

**5.** எகிப்தின் எத்திசையில் செங்கடல் அமைந்துள்ளது?
(1) மேற்கு (2) வடக்கு (3) கிழக்கு (4) தெற்கு (5) தென்கிழக்கு

**6.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - மத்தியதரைக்கடலின் கரையில் அமைந்துள்ள துறைமுகமாகும்.
B - இப்பகுதியில் மக்கபேயருக்கும் கிரேக்கருக்கும் இடையில் யுத்தம் நடைபெற்றது.
C - ஜீகோன் ஆறு இப்பகுதியினூடாகப் பாய்கிறது.
D - தமது மூன்றாவது தூதுரைப் பயணத்தில் பவுல் இப்பகுதியைத் தரிசித்துள்ளார்.
E - இப்பகுதி மேற்கு மலைப்பகுதிக்கும் கரையோர வெளிக்கும் இடையில் அமைந்துள்ளது.
இவற்றுள் ஆக்கோ சமவெளி பற்றிய சரியான கூற்றுக்களாவன
(1) A, B, C (2) A, B, D (3) B, C, D (4) B, C, E (5) C, D, E

**7.** பாலஸ்தீனாவின் கிழக்கு மலைப்பகுதிகளைக் கொண்ட தெரிவு யாது?
(1) கலிலேயா, சமாரியா, யூதேயா (2) கலிலேயா, சமாரியா, அம்மோன்
(3) நெகேப், ஹெப்ரோன், கார்மேல் (4) பாசான், அம்மோன், மோவாபு
(5) ஏதோம், மோவாபு, ஹெப்ரோன்

**8.** பின்வருவனவற்றுள் எந்நகருக்கு அருகில் பெத்லகேம் அமைந்துள்ளது?
(1) எருசலேம் (2) காசா (3) எரிக்கோ (4) திபேரியஸ் (5) ஹெப்ரோன்

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



**9.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - ஆண்கள் 16 வயதில் திருமணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.
B - பெண்கள் 12 வயதில் திருமணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.
C - திருமண ஒப்பந்தம் ஒரு வருடத்தின் பின்னர் திருமணம் நடைபெற்றது.
D - கணவர் தம் மனைவியை விவாகரத்துச் செய்ய அனுமதி பெற்றிருந்தார்.
E - மனைவி தம் கணவரை விவாகரத்துச் செய்ய அனுமதி பெற்றிருந்தார்.
இவற்றுள் பண்டைய இஸ்ரயேலரின் திருமணம் பற்றிய சரியான கூற்றுக்களாவன
(1) A, B, C (2) A, B, D (3) B, C, D (4) B, C, E (5) C, D, E

**10.** பெரிய ஏரோது மன்னனின் பிறப்பிடம்
(1) கலிலேயா (2) பொனீசியா (3) சிரியா (4) இதுமேயா (5) மோவாபு

**11.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - பாஸ்காத் திருவிழா நிசான் மாதத்தில் கொண்டாடப்பட்டது.
B - கூடாரத் திருவிழா 'வாரங்களின் விழா' என அழைக்கப்பட்டது.
C - பெந்தக்கோஸ்தே திருவிழா 'சுக்கோத்' என அழைக்கப்பட்டது.
D - பெந்தக்கோஸ்தே திருவிழா அறுவடைத் திருவிழாவாகும்.
E - பாவக்கழுவாய் நாள் 'யோம் கிப்பூர்' என அழைக்கப்பட்டது.
இவற்றுள் பண்டைய இஸ்ரயேலரின் விழாக்கள் பற்றிய சரியான கூற்றுக்களாவன
(1) A, B, C (2) A, D, E (3) B, C, D (4) B, C, E (5) C, D, E

**12.** மகா அலெக்ஸ்சாண்டர் அரசருக்குப் பின்னர் பாலஸ்தீனாவை ஆட்சி செய்தவர் யார்?
(1) அந்தியோக்கஸ் எப்பிபானூஸ் (2) பொம்பே (3) அர்க்கெலா
(4) தொலமி (5) ஏரோது அந்திப்பா

**13.** செனத்திரின் சங்கத்தின் விதிமுறைகளை உள்ளடக்கிய நூல்
(1) விடுதலைப்பயண நூல் (2) இணைச்சட்டம் (3) ஞானநூல்
(4) டொசேடெப்பா (5) மிஸ்னா

**14.** புதிய ஏற்பாடு எழுதப்பட்ட மூலமொழி யாது?
(1) இலத்தீன் (2) அரமேயிக் (3) கிரேக்கம் (4) சிரியன் (5) எத்தியோப்பியன்

**15.** யூதர்களின் ஆதரவினை பெற்றுக்கொள்வதற்காக எருசலேம் ஆலயத்தினைப் புனரமைத்த அரசர் யார்?
(1) பெரிய ஏரோது (2) மகா அலெக்ஸ்சாண்டர்
(3) சீருஸ் (4) நெபுக்கேதனசார்
(5) ஏரோது அந்திப்பா

**16.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - அவர் செபக்கூடங்களில் நடைபெற்ற வழிபாடுகளில் பங்குபற்றினார்.
B - அவர் திருப்பாடல்கள் மூலம் செபிக்கக் கற்றுக்கொண்டார்.
C - அவர் ஏரோது அரசனின் பிடியிலிருந்து யோவானை விடுவிக்க முயற்சித்தார்.
D - அவர் கலிலேய செபக்கூடத்தில் தோராவைக் கற்றார்.
E - அவர் எருசலேம் ஆலயத்திற்குத் திருப்பயணம் மேற்கொண்டார்.
இவற்றுள் நாசரேத்து இயேசுவைப் பற்றிய சரியான கூற்றுக்களாவன
(1) A, B, C (2) A, B, D (3) A, B, E (4) B, C, D (5) C, D, E

**17.** நாசரேத்து செபக்கூடத்தில் இடம்பெற்ற இயேசுவின் தொடக்கப் போதனையில், இயேசு மேற்கோள் காட்டிய நூல்
(1) எரேமியா (2) எசாயா (3) எசேக்கியேல் (4) ஓசேயா (5) மலாக்கி

**18.** மத்தேயு நற்செய்தியின் மலைப்பொழிவில் குறிப்பிடப்பட்டுள்ள யூத சமய பக்தி முயற்சிகள் மூன்றும் யாவை?

(1) இறைவேண்டல், தர்மம், நோன்பு
(2) இறைவேண்டல், நோன்பு, தவச்செயல்கள்
(3) இறைவேண்டல், தவச்செயல்கள், தர்மம்
(4) தர்மம், நோன்பு, தியானம்
(5) தர்மம், நோன்பு, தவச்செயல்கள்

**19.** நல்ல சமாரித்தன் உவமை குறிப்பிடப்படுவது

(1) மத்தேயு நற்செய்தியில் ஆகும். (2) மாற்கு நற்செய்தியில் ஆகும்.
(3) லூக்கா நற்செய்தியில் ஆகும். (4) எபிரேயருக்கு எழுதிய மடலில் ஆகும்.
(5) யாக்கோபு மடலில் ஆகும்.

**20.** “இறுதி நாளில் எல்லோர் மேலும் ஆவியைப் பொழிவேன்” (யோவேல் 2: 28-32) என்ற இறைவாக்கு நிறைவேறியது

(1) இயேசுவின் திருமுழுக்கின் போதாகும்.
(2) கானாவூர் திருமணத்தின் போதாகும்.
(3) இயேசுவின் உருமாற்றத்தின் போதாகும்.
(4) கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் போதாகும்.
(5) பெந்தகோஸ்தே தினத்தன்றாகும்.

**21.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A - இயேசுவே மெசியா ஆவார்.
B - யூதர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்து மரணத்திற்குட்படுத்தினர்.
C - இயேசு மூன்றாம் நாளில் மரணத்திலிருந்து உயித்தெழுந்தார்.
D - இயேசு தமது இறப்பு, உயிர்த்தெழுதல் என்பன பற்றி தம் திருத்தூதர்களுக்கு முன்னறிவித்தார்.
E - இயேசு உவமைகளினூடாக மக்களுக்குப் போதித்தார்.

இவற்றுள் பெந்தகோஸ்தே நாளில் புனித பேதுரு ஆற்றிய முதல் மறையுரை பற்றிய சரியான கூற்றுக்களாவன

(1) A, B, C (2) A, B, D (3) A, B, E (4) B, C, D (5) C, D, E

**22.** அந்தியோக்கியாவில் கிறிஸ்தவத் திருச்சபையைத் தோற்றுவிப்பதற்காக புனித பவுலை அழைத்துச் சென்றவர் யார்?

(1) பேதுரு (2) தீமோத்தேயு (3) லூக்கா (4) பர்னபா (5) அனனியா

**23.** புனித பவுலின் இரண்டாவது திருத்தூதுப் பயணத்தின்போது அவருடன் இணைந்து கொண்ட திருத்தூதர்களை மட்டும் கொண்ட விடையைத் தெரிவு செய்க.

(1) லூக்கா, மாற்கு, பர்னபா (2) லூக்கா, தீமோத்தேயு, மாற்கு
(3) சீலா, தீமோத்தேயு, லூக்கா (4) தீமோத்தேயு, தீத்து, லூக்கா
(5) சீலா, பர்னபா, லூக்கா

**24.** புனித பவுல் எந்த நகரத்தில் வீட்டுக்கைதியாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார்?

(1) உரோம் (2) மால்தா
(3) எபேசு (4) கொரிந்து
(5) அந்தியோக்கியா

**25.** உரோமைப் பேரரசர்கள் ஆட்சிபீடமேறிய சரியான ஒழுங்குமுறையைக் கொண்ட தெரிவு யாது?

(1) நீரோ, மாற்குஸ் அவுரேலியன், அவுரேலியன், திராயன்
(2) அவுரேலியன், நீரோ, திராயன், மாற்குஸ் அவுரேலியன்
(3) நீரோ, திராயன், மாற்குஸ் அவுரேலியன், அவுரேலியன்
(4) மாற்குஸ் அவுரேலியன், நீரோ, அவுரேலியன், திராயன்
(5) திராயன், மாற்குஸ் அவுரேலியன், நீரோ, அவுரேலியன்

[பக். 4 ஐப் பர்க்க

Past Papers Wiki



26. 'சத்தியத்தின் பாதுகாவலர்கள்' என அழைக்கப்பட்ட திருச்சபைத் தந்தையர்களை உள்ளடக்கிய தெரிவு யாது?
   (1) அலெக்சாந்திரிய கிளமெண்ட், ஒரிஜன், இரனேயுஸ், யஸ்ரின்
   (2) ஒரிஜன், யஸ்ரின், தேர்த்தூலியன், பசில்
   (3) யஸ்ரின், தேர்த்தூலியன், அலெக்ஸ்சாந்திரிய சிறில், ஒரிஜன்
   (4) தேர்த்தூலியன், கிரகோரி, அத்தனாசியுஸ், ஆரியுஸ்
   (5) அலெக்சாந்திரிய கிளமெண்ட், ஒரிஜன், யஸ்ரின், தேர்த்தூலியன்

27. பின்வருவனவற்றுள் சரியான சோடியைத் தெரிவுசெய்க.
   (1) பிளேட்டோ - ஸ்தொயிக்கம்
   (2) ஜெரோம் - வல்கேற்
   (3) சீனோ - நோஸ்டிக்கம்
   (4) வலன்ரீனஸ் - செப்வாஜீந்
   (5) எசேபியுஸ் - பிளேற்றோனிசம்

28. கிறிஸ்தவ துறவற வாழ்க்கை முறையின் நிறுவுனர்
   (1) புனித ஜெரோம்
   (2) புனித பக்கோமியுஸ்
   (3) புனித எகிப்து அந்தோனியார்
   (4) புனித பசில்
   (5) புனித அகுஸ்தீன்

29. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
   A - இறைவாக்கினர் யோபுவின் துன்பியல் வாழ்க்கை
   B - இயேசுவின் பாலைவன உண்ணா நோன்பு
   C - தானியேலின் காட்சிகளும் விளக்கங்களும்
   D - திருமுழுக்கு யோவானின் பாலைவன வாழ்க்கை
   E - எலியாவின் வாழ்க்கை அம்சங்கள்
   இவற்றுள் ஆரம்பகால துறவற வாழ்வுக்குத் தூண்டுதலாக அமைந்த சரியான கூற்றுக்களாவன
   (1) A, B, C (2) A, B, D (3) A, C, E (4) B, C, D (5) B, D, E

30. இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, அயர்லாந்து, ஜேர்மனியின் திருத்தூதர்களை ஒழுங்குமுறையில் கொண்ட தெரிவு யாது?
   (1) பெரிய கிரகோரியார், கொலம்பா, பற்றிக், பொனிபாஸ்
   (2) கொலம்பா, பற்றிக், பெரிய கிரகோரியார், பொனிபாஸ்
   (3) பெரிய கிரகோரியார், பொனிபாஸ், பற்றிக், கொலம்பா
   (4) பற்றிக், பொனிபாஸ், கொலம்பா, பெரிய கிரகோரியார்
   (5) பொனிபாஸ், பெரிய கிரகோரியார், பற்றிக், கொலம்பா

31. பின்வருவனவற்றுள் ஐரோப்பிய பல்கலைக்கழகக் கல்வியின் எதிர்காலத்துக்கு வழிவகுத்த துறவற சபை யாது?
   (1) இயேசு சபை
   (2) டொமினிக்கன் துறவறசபை
   (3) பெனடிக்ட் துறவறசபை
   (4) அகுஸ்தீனிய துறவறசபை
   (5) சலேசிய துறவறசபை

32. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
   A - ஆட்சியாளர்களை நியமித்தல்
   B - நாடுகளைக் கைப்பற்றுதல்
   C - புதிய முயற்சிகளில் ஈடுபடுதல்
   D - போர் வீரர்களைப் பலப்படுத்துதல்
   E - பணம், சொத்துக்களைத் திரட்டுதல்
   இவற்றுள் இருண்டகால மேலைத்தேய திருச்சபை பற்றிய சரியான கூற்றுக்களாவன
   (1) A, B, C (2) A, B, D (3) A, C, E (4) A, D, E (5) B, C, D

33. பெனடிக்ற் துறவறப் பாடசாலைகளில் கற்பிக்கப்பட்ட பாடங்களைக் கொண்ட தெரிவு யாது?
   (1) திருவிவிலியம், பண்டைய கிரேக்க இலக்கியம், திருவழிபாட்டிற்கான ஆக்கங்கள்
   (2) திருவிவிலியம், பண்டைய இலத்தீன் இலக்கியம், திருச்சபைத் தந்தையர்களின் ஆக்கங்கள்
   (3) திருவிவிலியம், இறையியல், பண்டைய இலத்தீன் இலக்கியம்
   (4) திருவிவிலியம், திருச்சபைத் தந்தையர்களின் ஆக்கங்கள், ஐரோப்பிய வரலாறு
   (5) திருவிவிலியம், பண்டைய கிரேக்க இலக்கியம், உரோமைப் பேரரசர்களின் வரலாறு

[பக். 5 ஐப் பார்க்க

**34.** மூன்றாம் சிலுவைப் போரில் பங்கேற்ற இங்கிலாந்து மன்னன்
(1) 1 ஆம் எட்வேட் (2) 7 ஆம் லூயிஸ் (3) 2 ஆம் பிரட்ரிக் (4) 1 ஆம் ரிச்சட் (5) 2 ஆம் பிலிப்பு

**35.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - உறுப்பினர்கள் அடிப்படை பட்டமொன்றைப் பெற்றிருக்க வேண்டும்.
B - புனித வின்சென்ற் த பவுலால் நிறுவப்பட்டது.
C - பல்கலைக்கழக நகரங்களில் சபையின் இல்லங்கள் நிறுவப்பட்டன.
D - மறைமாவட்ட குருக்களின் குழு ஆரம்பிக்கப்பட்டது.
E - தென் பிரான்சிய கிராமங்களில் வாழ்ந்த வறியோருக்குச் சேவையாற்றுதல் சிறப்பு நோக்கமாகும்.
இவற்றுள் வின்சென்சியன் சபை பற்றிய சரியான கூற்றுக்களாவன
(1) A, B, C (2) A, B, D (3) A, C, E (4) B, C, D (5) B, D, E

**36.** புனித ஆன்ஸ்காவின் கல்விப் பணியால் நன்மையடைந்த நாடுகள் யாவை?
(1) ஜெர்மனி, டென்மார்க் (2) டென்மார்க், ஸ்கொட்லாந்து
(3) சுவீடன், டென்மார்க் (4) இங்கிலாந்து, சுவீடன்
(5) அயர்லாந்து, சுவீடன்

**37.** கி.பி. 538 இல் விவிரியன் எனுமிடத்திலிருந்த மடாலயத்தை பங்குப் பாடசாலையாக மாற்றியவர்
(1) கன்ரபெரி அகுஸ்தீன் (2) கசியோடோறஸ்
(3) அயர்லாந்து பற்றிக் (4) புனித பொனிபஸ்
(5) புனித ஜெரோம்

**38.** பங்குப் பாடசாலைகளில் கற்பிக்கப்பட்ட பிரதான பாடங்களைக் கொண்ட தெரிவு யாது?
(1) கிறிஸ்தவ வாழ்வு, வழிபாடு, இசை
(2) இசை, மெய்யியல், வழிபாடு
(3) இறையியல், மெய்யியல், வழிபாடு
(4) சட்டம், கேத்திரகணிதம், இசை
(5) கிறிஸ்தவ வாழ்வு, இறையியல், வழிபாடு

**39.** பொலஞ்ஞா பல்கலைக்கழகத்தில் இயற்கைச் சட்டம் போதிக்கப்படுவதனை ஊக்கப்படுத்திய மெய்யியலாளர்
(1) அரிஸ்டோட்டல் (2) பிளேட்டோ
(3) புனித பேர்னாட் (4) பியற்றோ மொம்பனாஸி
(5) இம்மானுவேல் கான்ட்

**40.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - இத்தாலிய மொழியின் தந்தையாவார்.
B - 70 ஆண்டுகள் துறவறமட அதிபராகப் பணியற்றியவர்.
C - 'கிறிஸ்து வழி வாழ்வு' எனும் நூலின் ஆசிரியராவார்.
D - 'தன்னிலை ஏற்பு' எனும் நூலால் ஆன்மிக வாழ்வைப் புதுப்பித்தவர்.
E - தினமும் நற்கருணை பெறுவதால் தகுதியாக வாழ வழிகாட்டியவர்.
இவற்றுள் தோமஸ் ஆ கெம்பிஸ் பற்றிய சரியான கூற்றுக்களாவன
(1) A, B, C (2) A, B, D (3) A, C, D (4) B, C, D (5) B, C, E

**41.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - வளைந்த அல்லது வட்ட வடிவிலான ஆலய அமைப்பு
B - ஆலயத்தின் மத்திய பகுதியில் முழுமையாக தூணோ சாய்தளமோ கிடையாது.
C - கிரேக்க சிலுவையின் வடிவில் நிர்மாணிக்கப்பட்ட அமைப்பு
D - கூரான முகப்பினைக் கொண்ட அமைப்பு
E - தட்டையான கூரைக்குப் பதிலாக அரைவட்ட வடிவிலான கூரை அமைப்பு
இவற்றுள் பைசாந்திய ஆலயக் கட்டடக்கலை பற்றிய சரியான கூற்றுக்களாவன
(1) A, B, C (2) A, B, D (3) A, B, E (4) A, C, D (5) B, C, D

[பக். 6 ஐப் பர்க்க

**42.** ஒரத்தோரியோ இசைக்கு வித்திட்டவர்
(1) பெரோடின்
(2) திருத்தந்தை 1 ஆம் கிரகோரி
(3) திருத்தந்தை 12 ஆம் பத்திநாதர்
(4) ஜோர்ஜ் பிரட்றிக்
(5) லுட்விக்வேன் பீத்தோவன்

**43.** சீன புராதன கதைகளைப் பயன்படுத்தி படைப்புக் கதையினை விளக்கியவர் யார்?
(1) அருட்பணி மத்தேயு ரிச்சி
(2) அருட்பணி ஜோசப் வாஸ்
(3) அருட்பணி கொஸ்மே த டொரஸ்
(4) அருட்பணி பிலிப் பல்தேயுஸ்
(5) அருட்பணி றொபட் டி நொபிலி

**44.** ஜப்பானில் கிறிஸ்தவம் தடைசெய்யப்பட்டு, இயேசு சபையினர் விரட்டியடிக்கப்பட்ட ஆண்டு
(1) 1597 (2) 1612 (3) 1817 (4) 1861 (5) 1973

● பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி **45**, **46** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

| | | | |
|---|---|---|---|
| A - மனித உழைப்பு | B - புசான், தென் கொரியா | C - சிங்கப்பூர் | D - அன்பே கடவுள் |
| E - அன்னையும் ஆசிரியையும் | F - 1973 ஆம் ஆண்டு | G - 2013 ஆம் ஆண்டு | H - திருச்சபையின் சமூக ஈடுபாடு |

**45.** திருத்தந்தை இரண்டாம் ஜோன் பவுல் அவர்களுடன் தொடர்புடைய சோடி
(1) A, E (2) A, H (3) B, C (4) C, H (5) D, E

**46.** ஆசிய கிறிஸ்தவ சம்மேளனத்துடன் தொடர்புடைய சோடி
(1) A, F (2) A, G (3) B, E (4) C, F (5) D, H

**47.** வெல்லஸ்ஸ - புத்தள பகுதியிலுள்ள வறிய மக்களின் வாழ்விற்காக தன்னையே அர்ப்பணித்து, அவர்களை சமூக ரீதியாக உயர்த்தி, சுற்றாடலைப் பாதுகாக்க வழிநடத்தியவரும், நீதிக்கான அவரது நிலைப்பட்டிற்காக படுகொலை செய்யப்பட்டவருமான குருவானவர்
(1) அருட்பணி பீற்றர்பிள்ளை
(2) அருட்பணி மேரி பஸ்ரியான்
(3) அருட்பணி சந்திரா பெர்னாண்டோ
(4) அருட்பணி ஜோன் ஹேர்பட்
(5) அருட்பணி மைக்கல் றொட்ரிக்கோ

**48.** எச்சுற்றுமடலின் நூற்றாண்டினை நினைவுகூர்ந்து 'நூறாவது ஆண்டு' எனும் சுற்றுமடல் வெளியிடப்பட்டது?
(1) தொழிலாளர் நிலைமை
(2) அன்னையும் ஆசிரியையும்
(3) அவனியில் அமைதி
(4) மனித உழைப்பு
(5) மக்கள் முன்னேற்றம்

**49.** உலக கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனத்தின் (WCC) உருவாக்கத்திற்காக இணைக்கப்பட்ட இரண்டு பிரதான கிறிஸ்தவ அமைப்புக்களாவன
(1) 'சர்வதேச மிஷனரி சங்கம்' மற்றும் 'உலக மறைக்கல்விப் பேரவை'
(2) 'உலக மிஷனரி மாநாடு' மற்றும் 'வாழ்வும் பணிக்குமான இயக்கம்'
(3) 'நம்பிக்கைக்கும் ஒழுங்குக்குமான இயக்கம்' மற்றும் 'வாழ்வும் பணிக்குமான இயக்கம்'
(4) 'நம்பிக்கைக்கும் ஒழுங்குக்குமான இயக்கம்' மற்றும் 'பப்ரிஸ்ட் திருச்சபை'
(5) 'உரோமன் கத்தோலிக்கத் திருச்சபை' மற்றும் 'உலக மிஷனரி மாநாடு'

**50.** பின்வருவனவற்றுள் சரியான சோடியைத் தெரிவுசெய்க.
(1) ஆயர் பொன்ஜீன் - காலி மறைமாவட்டம்
(2) யுவான் டி லிஸானோ - மன்னார் மறைசாட்சிகள்
(3) யாக்கோமே கொன்சால்வேஸ் - இலங்கையின் முதலாவது ஒரத்தோரியன் குரு
(4) ஆயர் லியோ நாணயக்கார - இலத்தீன் வழிபாடு
(5) சுவாமி ஞானப்பிரகாசர் - இயேசுசபைக் குரு

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

ක්‍රිස්තියානි ශිෂ්ටාචාරය II
கிறிஸ்தவ நாகரிகம் II
Christian Civilization II

**49 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி **II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. (i) இயேசுவின் காலத்து யூத குழுக்கள் **இரண்டினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)
   (ii) நாகரிகத்தின் பண்புகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
   (iii) இஸ்ரயேலின் வளர்ச்சியில் தாவீது அரசனின் பங்களிப்பினை விளக்குக. (06 புள்ளிகள்)
   (iv) பண்டைய இஸ்ரயேலில் அடிமைகளின் நிலை பற்றிக் கலந்துரையாடுக. (08 புள்ளிகள்)

2. (i) தொடக்ககால கிறிஸ்தவ யுகத்தில் காணப்பட்ட கிரேக்க மெய்யியல்கள் **இரண்டினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)
   (ii) கடவுளின் அரசு பற்றிய இயேசுவின் போதனைகள் **நான்கினைப்** பட்டியலிடுக. (04 புள்ளிகள்)
   (iii) இயேசுவின் புதுமைகள் எவ்வாறு 'விண்ணரசின் அடையாளங்களாக' விளங்குகின்றன என்பதனை விளக்குக. (06 புள்ளிகள்)
   (iv) புனித பவுல் தமது தூதுரைப் பயணங்களின்போது எதிர்கொண்ட சவால்களை விளக்குக. (08 புள்ளிகள்)

3. (i) இரவலர் துறவற சபைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
   (ii) லியோனாடோ டாவின்சியின் பங்களிப்பினைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)
   (iii) கதிற்றல் பாடசாலைகளினால் கல்வித் துறையில் ஏற்பட்ட விளைவுகள் **மூன்றினை** விவரிக்குக. (06 புள்ளிகள்)
   (iv) அங்கிலிக்கன் திருச்சபையின் உருவாக்கம் மற்றும் பணிகள் பற்றிக் கலந்துரையாடுக. (08 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

## பகுதி II

**4.** (i) சீனாய் உடன்படிக்கை பற்றி விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) இலங்கைக் கிறிஸ்தவர்கள் திருச்சபைகளின் போதனைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் எவ்வாறு கடவுளின் புனித மக்களாக சாட்சியம் பகர முடியுமென்பதைப் பற்றிக் கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

**5.** (i) அன்பு என்பது ஏனைய சகல விழுமியங்கள், ஆன்மிகக் கொடைகளையும் விட மேலானது என புனித பவுல் எவ்வாறு போதிக்கிறார் என்பதனை விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) அன்பு, தியாகம் பற்றிய புனித பவுலின் போதனைகளை இலங்கையின் பல்வேறு சமயங்களைப் பின்பற்றுபவர்கள் மத்தியில் சமய நல்லிணக்கத்தையும் பரஸ்பர மரியாதையையும் கட்டியெழுப்புவதற்கு எவ்வாறு மாதிரியாகக் கொள்ளமுடியும் என்பது பற்றிக் கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

**6.** (i) மத்திய காலத்தில் காணப்பட்ட டொமினிக்கன் துறவற சபையின் தோற்றம், பணிகள் ஆகியவற்றை விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) மாணவர்கள் மத்தியில் சுற்றுச்சூழல் உணர்வுகளைக் கட்டியெழுப்ப கிறிஸ்தவக் கல்வி எவ்வாறு உதவலாம் என்பதனை விளக்குக. (10 புள்ளிகள்)

**7.** (i) மறுமலர்ச்சிக் காலத்தில் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் புதுப்பித்தலுக்கு இயேசு சபையினர் வழங்கிய பங்களிப்புக்களை விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) உலகம் தப்பறையான போதனைகளாலும் நவீன சமூகச் சீர்கேடுகளாலும் நிறைந்துள்ள காலகட்டத்தில், இன்றைய திருச்சபைத் தலைவர்களின் பணிகள் பற்றிக் கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

**8.** (i) அமைதி, சகவாழ்வு பற்றிய இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் போதனைகளை விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) தற்கால உலகளாவிய பதட்டம் மற்றும் போர்கள் நிறைந்த சூழ்நிலைகளுக்கு மத்தியில் கிறிஸ்தவத் திருச்சபையின் வகிபாகம் மற்றும் கிறிஸ்தவர்களின் பொறுப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library